# கச்சத்தீவுப் பிரச்சினை: பேரவையில் முதல்வர் உரை!...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு சில முன்னெடுப்புகளைமேற்கொண்டுள்ளது. அவற்றை தங்கள் வாயிலாக இப்பேரவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**(1) மன்னார் வளைகுடா பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக தெற்கு பகுதியில் இந்தியப் பெருங்கடல் நோக்கிச் செல்வதற்கு வழிவகை செய்யும்பொருட்டு, தங்கச்சிமடம் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் துவங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**(2) 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாம்பன் பகுதியிலும் மற்றும் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் குந்துக்கல் பகுதியிலும் மீன்பிடித் துறைமுகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே நான் அறிவித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**இவற்றைத் தவிர, மன்னார் வளைகுடா பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்த சில புதிய வாழ்வாதாரத் திட்டங்களையும் செயல்படுத்திட பின்வரும் சிறப்புத் திட்டங்களை அறிவிக்கின்றேன்:**

**1. கடற்பாசி வளர்ப்பு, பதப்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், விற்பனை தொடர்புடைய தொழில்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியுடன் தேவையான உபகரணங்கள் அளித்து தொழிலில் ஈடுபட சுமார் 7000 பயனாளிகளுக்கு 52 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**2. கூண்டு முறையில் மீன் மற்றும் சேற்று நண்டு வளர்ப்பு, பதப்படுத்துதல், விற்பனை தொடர்புடைய தொழில்களை மீனவ சமுதாய மக்கள் மேற்கொள்ள 25 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் உபகரணங்கள் வழங்கி, தொடர்பணிகளும் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

> **நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து மேம்படுத்தும் பொருட்டு, இந்திய பெருங்கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்பு செய்வதற்கு ஏதுவாக, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் 360 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 216 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மொத்தம் 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களால் மன்னார் வளைகுடா பகுதியைச் சார்ந்த மாவட்டங்களின் மீனவர்கள் பெரிதும் பயனடைவார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வாழ்வாதாரமும் மேம்படும்.**

**3. மீன் பதப்படுத்துதல், மீன் உலர்த்தும் தொழில்நுட்பங்கள், தொழில்நுட்ப உபகரணங்களை அளித்தல் மற்றும் பயிற்சிகள் வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் சுமார் 2,500 மீனவக் குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகளுக்கு 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**4. சுமார் 15 ஆயிரத்து 300 மீனவர்களுக்கு, மீன் மற்றும் மீன் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்வதற்கான தொழில்நுட்ப பயிற்சி வழங்கிட 20 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**5. மீன் வளம் சார்ந்த மாற்று வாழ்வாதாரமான வலை பின்னுதல், வலை பழுதுபார்த்தல், படகு கட்டுமானத் தொழில் படகு பழுதுபார்த்தல், கருவாடு தயாரித்தல், வண்ண மீன் தொட்டிகள் தயாரித்தல், படகு ஓட்டுநர் பயிற்சி, கடல்சிப்பி அலங்கார பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில்கள் செய்ய 54 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 20,100 மீனவர்கள் பயன் பெறக்கூடிய வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

**6. மீன் வளம் சாராத பிற தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர, குறிப்பாக, காளான் வளர்ப்பு, சுற்றுலா படகு இயக்குதல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல், வீட்டுமுறை மசாலா பொடிகள் தயாரித்தல், அழகுக்கலை பயிற்சி, சிறுதானிய உணவு தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்கள் செய்ய சுமார் 14 ஆயிரத்து 700 பயனாளிகளுக்கு, 53 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

தமிழ்நாடு அரசின் மீன் வளத் துறை, மீனவர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தொழிலாளர் நலத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளும், அரசு துறைகளும் இணைந்து இத்திட்டங்களைச் செயல்படுத்தும்.

**திட்டங்களை ஒருங்கிணைக்க கண்காணிப்புப் பிரிவு!**

இந்தத் திட்டங்களை எல்லாம் ஒருங்கிணைக்க திட்டக் கண்காணிப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு, அதன்மூலம் திட்டச் செயல்பாடு தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து மேம்படுத்தும் பொருட்டு, இந்திய பெருங்கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்பு செய்வதற்கு ஏதுவாக, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் 360 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 216 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மொத்தம் 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களால் மன்னார் வளைகுடா பகுதி யைச் சார்ந்த மாவட்டங்களின் மீன வர்கள் பெரிதும் பயனடைவார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வாழ்வாதாரமும் மேம்படும்.

அதுமட்டுமல்ல; நமது மீனவ சகோதரர்களின் குடும்பத்தினர் கூடுதல் வாய்ப்புகள் பெற்று, அதிகமான பொருளீட்ட வழிவகை ஏற்படுத்தப்படும் என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க,ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!




---

### தி.மு.க. மாணவர் அணி மண்டல வாரியாக

## மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

மதுரை மாட்டுத்தாவணி சுற்றுச் சாலையில் அமைந்துள்ள "பாப்பீஸ் ஓட்டலில்" "மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்" இன்று (09.04.2025) காலை 9.00 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அதலை பி.செந்தில்குமார், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, ஜெ.ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, திருநெல்வேலி மாநகரம், தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தஆய்வுக் கூட்டத்தில், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்.

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புகளை அவசியம் கொண்டுவர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

`அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள்: 07.04.2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் புலவர் கி.தியாகராசன்
### ஏப்ரல் 9 (2000)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டு, பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுடன் திராவிடர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மானத் தொண்டராய் – பேரறிஞர் அண்ணாவின் பேரன்பையும் – தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் பெற்றவர்.

தந்தை பெரியாரின் இல்லத்தில் தங்கி, 'குடிஅரசு' நாளிதழில் பணியாற்றியதோடு, கழகத்தின் "நம் நாடு" ஏட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இயக்கத் தொண்டாற்றியவர்.

இராயபுரம் பகுதியில் கழகம் வளர்ந்திட இயக்கத் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

### பொதுமக்கள், வியாபாரிகள், பக்தர்கள் கோரிக்கையை ஏற்று

## திருத்தணி - திருச்செந்தூர் அரசு விரைவு பேருந்து சேவை!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர் ஏப் 9-*

*தென் மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் ஏராளமானோர் திருத்தணி சுற்று வட்டார பகுதிகளில் வியாபாரம் செய்து வருகின்றார். மேலும் திருத்தணி - திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் சென்று வருகின்றனர். இருப்பினும் திருத்தணியிலிருந்து திருச்செந்தூர் வரை நேரடி போக்குவரத்து சேவை இல்லாததால், வியாபாரிகள் மற்றும் பக்தர்கள் அவதி அடைந்து வந்தனர் திருத்தணியிலிருந்து திருச்செந்தூருக்கு பேருந்து சேவை ஏற்படுத்த வேண்டும் என்று திருத்தணி பகுதி சேர்ந்த வியாபாரிகள் பொது மக்கள் பக்தர்கள் சார்பில் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ விடம் வலியுறுத்தினர். இதையடுத்து போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் பார்வைக்கு எஸ். சந்திரன் எம்.எல்.ஏ கொண்டு சென்று திருத்தணி-திருச்செந்தூர் இடையில் தமிழ்நாடு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் பேருந்து சேவைக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.*

*இதனையடுத்து திருத்தணியிலிருந்து திருச்செந்தூருக்கு விரைவு போக்குவரத்து சேவை தொடக்க விழா திருத்தணி பேருந்து நிலையத்தில் நேற்று மாலை நடைபெற்றது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட விரைவு பேருந்துக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகம் பொது மேலாளர் மணி, துணை மேலாளர் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம். எல்.ஏ கொடியசைத்து பேருந்து சேவையை தொடங்கிவைத்தார். மாலை 6 மணிக்கு திருத்தணியிலிருந்து புறப்படும் விரைவுப் பேருந்து காஞ்சிபுரம், திண்டிவனம், விழுப்புரம், திருச்சி, மதுரை, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, வழியாக மறுநாள் காலை 8 மணிக்கு திருச்செந்தூர் சென்றடையும். அதேபோல் மாலை 4 மணிக்கு திருச்செந்தூரிலிருந்து புறப்படும் பேருந்து மறுநால் காலை 7 மணிக்கு திருத்தணி வந்தடையும் என்று விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. கட்டணமாக திருத்தணி முதல் திருச்செந்தூரருவரை ரூ. 650 என்றும் சிறுவர்களுக்கு ரூ. 325 என்று தெரிவித்தனர். தொடக்க விழாவில் திருத்தணி நகர திமுக செயலாளர் வி.வினோத்குமார், ஒன்றிய செயலாளர் கே.ராஜேந்திரன், நகர துணை செயலாளர் ஜி.எஸ். கணேசன், நகர பொருளாளர், டி.எஸ். ஷியாம் சுந்தர், மாவட்ட பிரதிநிதி, கே.எஸ். அசோக்குமார், நகரமன்ற உறுப்பினர்கள் ரேவதி சுரேஷ், வெங்கடேசன், தொ,மு.ச. மாவட்ட செயலாளர் ராமதாஸ், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சித்திக் அலி, நிர்வாகிகள் முனிரத்தினம், சீனிவாசன், முகமது மொய்தீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

---



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சென்னை வடக்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 09.04.2025 புதன்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடக்கு | அறிவகம் திருமண மாளிகை, இராயபுரம். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |
| 10.04.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | ஈரோடு வடக்கு | இராமாயம்மாள் திருமண மண்டபம், கோபிச்செட்டிபாளையம். |
| 12.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-04-2025

